அ.வ.எண்.176/2015 நாள்:22.10.2021

வா.சா.2.பழனி.

குறுக்கு விசாரணை :

பிரதிவாதி மைக்கேல்பட்டி சர்வே எண். 96/6J மற்றும் 96/5Cல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.96/6Jல் பிரதிவாதி பெரிய மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி அந்த வீட்டிற்கு கிழக்கு பக்கம் 6அடி சந்துவிட்டு வீடுகட்டியுள்ளார் என்றால் சந்து என்று சொல்லமுடியாது ஆனால் எதிர்மனுதாரின் அனுபவத்தில் உள்ள இடம் உள்ளது. அந்த சந்துக்கு கிழக்கு பக்கம் உள்ள வேலியில் 3 தென்னை மரங்களும் 5 பூவரச மரங்களும் இருந்தது என்றால் சரிதான். அந்த உயிர் வேலி பிரதிவாதி இடம் முழுவதும் இருந்தது என்றால் மரங்கள் மட்டும் தான் இருந்தது வேலி இல்லை. பிரதிவாதி தரப்பில் வேலியிலிருந்த மரங்களின் சுற்றளவு, உயரம் மற்றும் வயது ஆகியவற்றை எனது அறிக்கையில் குறிப்பிட வேண்டுமென்று குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் நான் வேலியிலிருந்த மரங்களின் சுற்றளவு, உயரம் மற்றும் வயது ஆகியவற்றை குறிப்பிடவில்லையென்றால் பிரதிவாதி தரப்பில் அதுபோல் குறிப்பாணை எதுவும் கொடுக்கப்படவில்லை. நீதிமன்ற கேள்வி ஏற்கனவே பிரதிவாதி தரப்பில் குறிப்பாணை கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளீரகளே என்றால் அது தவறு குறிப்பாணை எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனால் அந்த விவரங்கள் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட பிரதிவாதியின் வழக்கறிஞர் வாய்மொழியாக கூறினார். அதன்பிறகும் நான் வேலியிலிருந்த மரங்களின் சுற்றளவு, உயரம் மற்றும் வயதை கணக்கிடவில்லை என்றால் சுற்றளவு, உயரம் மற்றும் வயதை எனக்கு கணக்கிட தெரியாததால் அதனை குறிப்பிடவில்லை. ஆனால் எனது நேரடி பார்வை மூலம் அந்த மரங்கள் இருபது ஆண்டுகள் பழமையானவை என்றால் சரிதான். அந்த மரங்களுக்கு மேற்கு பக்கம் உள்ள இடம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றும் அந்த மரங்கள் தான் வாதி மற்றும் பிரதிவாதி இடங்களை பிரித்து காட்டுவதாக அமைந்துள்ளது என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தை அளவீடு செய்வதற்காக வந்த நிலஅளவையர் வழங்கிய அறிக்கையில் புல எண். 96/6J ல் 20 செண்ட் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும் நிலஅளவையர் அந்த அறிக்கையில் 20 செண்ட்டில் 7

செண்ட்டை பிரதிவாதியும் 13 செண்ட்டை வாதியும் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நானும் எனது அறிக்கையில் புல எண். 96/6J ல் உள்ள 20 செண்ட் நிலத்தில் எனது வரைபடத்தில் FBCH என்று காட்டப்பட்டுள்ள 13 செண்ட்டை வாதியும் AFHD என்று காட்டப்பட்டுள்ள 7 செண்ட்டை பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் புல எண். 96/6J ல் 20 செண்ட் உள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் எனக்கு வழங்கப்பட்ட வாரண்ட்டில் 14 2/3 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அதுபோல் கூறியுள்ளேன். நிலஅளவையர் வழங்கிய வரைபடத்தில் புல எண். 96/6J ல் பூமியில் எவ்வளவு இடம் உள்ளது என்று அளந்து 20 செண்ட் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் நிலஅளவையர் வழங்கிய அறிக்கை மற்றும் வரைபடத்தை சரியாக புரிந்து கொள்ளாமல் 20 செண்ட் என தவறாக கூறியுள்ளேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை. /ஒ.ம்/

திரு. A. தனசேகரன், BSc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.